**மில்கோ தனியார் கம்பனி - 2022**

-----------------------------------------------------------

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 மறுப்பு அபிப்பிராயம்

மில்கோ தனியார் கம்பனியின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிக்கூற்றுக்கள் மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிகூற்றுக்களுடன் தொடர்புடைய முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

கம்பனியின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக நான் அபிப்பிராயம் ஒன்றை தெரிவிக்கவில்லை. மறுப்பு அபிப்பிராயத்திற்காக அடிப்படை எனும் பிரிவில் கலந்துரையாடியுள்ள விடயங்கள் காரணமாக இந்த நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக கணக்காய்வு அபிப்பிராயமொன்றிற்கான அடிப்படை ஒன்றை வழங்க போதிய மற்றும் பொருத்தமான கணக்காய்வு சான்றுகளை பெற்றுக் கொள்ள என்னால் முடியவில்லை.

### 1.2 மறுப்பு அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் நான் அபிப்பிராயம் ஒன்றை தெரிவிக்கவில்லை.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, கம்பனியின் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது கம்பனியை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

கம்பனியின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் கம்பனியின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பிலான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க கம்பனியின் நிதிக்கூற்றுக்கள் மீது கணக்காய்வாளரின் அறிக்கையை வழங்குதல் எனது பொறுப்பாகும். எவ்வாறாயினும், அபிப்பிராயத்தை மறுப்பதற்கான அடிப்படைப் பந்தியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களின் காரணமாக இந்நிதிக்கூற்றுக்கள் சம்பந்தமான கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான ஒரு அடிப்படையினை வழங்குவதற்கு போதியளவானதும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக் கொள்வதற்கு முடியாதுள்ளேன்.

## 1.5 நிதிக்கூற்றுக்கள் தயாரிப்பது தொடர்பாக கணக்காய்வு அவதானிப்புகள்

### 1.5.1 இலங்கை கணக்கீட்டு நியமங்களுடனான இணக்கமின்மைகள்

| | குறித்த நியமத்திற்கான தொடர்புடன் கூடிய இணக்கமின்மை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | இலங்கை கணக்கீட்டு நியமம் 02 இன் 09 பந்தி பிரகாரம் இறுதி உற்பத்தி முடிவு இருப்பு கணக்கிடும் போது கிரயம் அல்லது தேறிய மாற்றப்பட்ட பெறுமதியின் குறைந்த பெறுமதிக்கு இறுதி இருப்பை அறிக்கையிட வேண்டிய போதும் கம்பனியினால் திகன தொழிற்சாலையில் இறுதி உற்பத்தி முடிவு இருப்பின் தேறிய மாற்றப்பட்ட பெறுமதியான ரூபா 46,872,232 இற்கு பதிலாக கிரயப் பெறுமதியான ரூபா 50,661,862 தொகை கணக்கீடு செய்த காரணத்தால் மொத்த இருப்பு மீதி ரூபா 3,789,630 இனால் கூடுதலாக காண்பிக்கப்பட்டிருந்தது. | திகன தொழிற்சாலையில் நிதிக்கூற்று தயாரிக்கும் போது இறுதி முடிவு இருப்பாக தொழிற்சாலை விலைக்கு கணக்கிட்ட இருப்பின் பெறுமதி தவறுதலாக உள்ளடக்கப்பட்டுள்ளது. | இலங்கை கணக்கீட்டு நியமம் 02 இன் 09 பந்தி பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | இலங்கை கணக்கீட்டு நியமம் 7 பிரகாரம் ரூபா 205,000,000 ஆன நீண்ட கால நிலையான வைப்பை மீட்டல் காசுப் பாய்ச்சல் கூற்றில் முதலீட்டு செயற்பாடுகளின் கீழ் காசு உட்பாய்ச்சலாக காட்டப்படவில்லை. நியமத்தின் 7 ஆம் பந்தி பிரகாரம் 03 மாதங்கள் அல்லது 03 மாதங்களிற்கு குறைந்த காலத்தில் முதிர்வடையும் முதலீடுகள் காசுப் பாய்ச்சல் கூற்றில் சாசு மற்றும் காசிற்று சமமானவற்றில் உள்ளடக்க வேண்டிய போதும் மீட்கப்பட்ட வைப்பு மீண்டும் குறுங்கால முதலீடாக முதலீடு செய்யப்பட்டு இருந்ததுடன் அந்த முதலீடு ஆண்டு இறுதியில் காசு மற்றும் காசிற்கு சமமானவற்றின் கூட்டுத் தொகையாக காண்பிக்கப்பட வேண்டிய போதும் அவ்வாறு காணக்கீடு செய்யப்படவில்லை. | தவறுதலாக குறிப்பிடப்பட்டதால் குறித்த வித்தியாசம் ஏற்பட்டுள்ளது. எதிர்வரும் ஆண்டுகளில் கூட்டிணைந்த நிதிக்கூற்றுக்களை தயாரிக்கும் போது சரியான முறையில் குறித்த நிலையான வைப்பை கணக்கீட்டு குறிப்பிட நடவடிக்கை எடுக்கிறேன். | காசுப் பாய்ச்சல்களை சரியாக இனங்கண்டு காசுப் பாய்ச்சல் கூற்றை தயாரிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | இலங்கை கணக்கீட்டு நியமம் 16 இன் 31 மற்றும் 34 பந்தி பிரகாரம் சொத்து மீள்மதிப்பீடொன்றை மேற்கொண்ட பின்னர் குறித்த கால எல்லையினுள் சொத்து மீள்மதிப்பீடொன்றை மேற்கொள்ள வேண்டிய போதும் கம்பனியினால் 2008 ஆண்டின் பின்னர் மீளாய்வாண்டு வரை சொத்து மீள்மதிப்பீட்டை மேற்கொள்ளாத காரணத்தால் புதிய மீள்மதிப்பீட்டு பெறுமதிகள் கணக்குப் புத்தகங்களில் உள்ளடக்கப்படவில்லை. | முகாமைத்துவத்தை அறிவுருத்தி எதிர்காலத்தில் சொத்து மீள்மதிப்பீடொன்றை மேற்கொள்ள எதிர்பார்க்கிறேன். | இலங்கை கணக்கீட்டு நியமம் 16 இன் 31 மற்றும் 34 பந்தி பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஈ) | இலங்கை நிதி அறிக்கையிடல் நியமம் 09 இன் 5.5.15 பந்தி பிரகாரம் வியாபார கடன்படுனர் மீதியான ரூபா 539,538,417 இற்காக பிற்கால இழப்பீட்டை இனங்காணலை கணிப்பதற்கான எதிர்பார்த்த கடன் இழப்பு முறையை (Expected Credit Loss Method) பயன்படுத்த வேண்டிய போதும் அவ்வாறு கணக்கீடு செய்யப்படாததால் மீளாய்வாண்டில் வியாபார மற்றும் ஏனைய கடன்படுனர் மிகையாக அல்லது குறைவாக கணக்கிடப்பட்டிருந்தது. | தற்போது நிதிக்கூற்றில் ரூபா 539,538,417 ஆன வியாபார கடன்படுனர்களில் இருந்து ரூபா 50,913,625 ஆன அளவிற்கு ஐயக்கடன் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. | இலங்கை நிதி அறிக்கையிடல் நியமம் 09 இன் 5.5.15 பந்தி பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 1.5.2 கணக்கீட்டு குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | பிரதான அலுவலக நிதிக்கூற்றுக்களில் செலுத்த வேண்டிய மீதியினுள் கூட்டுத் தொகை ரூபா 48,184,538 உம் வியாபாரம் கடன்கொடுனர் மீதியினுள் ரூபா 12,278,092 ஆன வரவு மீதியும் பிரதான அலுவலகம் கொழும்பு, பொல்கஹவெல மற்றும் திகன பால் தொழிற்சாலைக்கு உரிய கடன்படுனர் மீதியினுள் ரூபா 42,699,675 ஆன செலவு மீதி காணப்படுவதன் காரணமாக மொத்த செலுத்த வேண்டிய மீதி, வியாபார கடன்கொடுனர் மீதி மற்றும் மொத்த கடன்படுனர் மீதி அந்த அளவால் குறைத்து காண்பிக்கப்பட்டு இருந்தது. | இந்த செலவு மற்றும் வரவு மீதிகள் நீண்ட காலமாக நிலவி வரும் மீதிகளாவதுடன் இந்த மீதிகள் கணக்கீட்டு தவறுகள் மற்றும் ஆவணரீதியான தவறுகளினால் ஏற்பட்டுள்ள போதும் தற்போதளவில் அந்த மீதிகள் தொடர்பாக பகுப்பாய்வொன்று மேற்கொள்ளப்பட்டு வருவதுடன் அவற்றை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கிறேன். | கணக்கு மீதிகள் பதிலீடு செய்யப்படாது நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்ட அட்டவணை பிரகாரம் பிரதான அலுவலகத்தினால் 2005 முதல் 2022 ஆண்டு வரை 90 சந்தர்பங்களிற்கு உரியதாக மேற்கொள்ளப்பட்ட கூட்டுத் தொகை ரூபா 8,804,121 ஆன (Unsettled Pre Payment) முற்கொடுப்பனவு நிதி நிலைமை கூற்றில் கடன்கொடுனரின் கீழ் வரவு மீதியாக காண்பிக்கப்பட்டிருந்தது. | அந்த கணக்கீட்டுத் தவறை 2023 ஆண்டில் நிதிக்கூற்றுக்களினுள் நடைமுறை சொத்துக்களின் கீழ் முன்வைத்து சரி செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது | முற்கொடுப்பனவு சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (இ) | ரூபா 131,829,724 ஆன முற்பணம், வைப்பு மற்றும் முற்கொடுப்பனவின் கீழ் காண்பித்துள்ள கூட்டுத் தொகை ரூபா 1,606,085 ஆன செலவு மீதி காணப்படுவதன் காரணமாக நிதிக்கூற்றுக்களில் காண்பித்துள்ள பெறுமதி அப் பெறுமானத்தால் குறைவாக கணக்கிடப்பட்டிருந்தது | இந்த செலவு மீதிகள் கணக்கீட்டு தவறுகளினால் ஏற்பட்ட மீதிளாவதுடன் தற்போது குறித்த செலவு மீதிகளை சரிசெய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது | கணக்கு மீதிகள் பதிலீடு செய்யப்படாது நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட வேண்டும். |
| (ஈ) | கடந்த ஆண்டிற்குரிய ரூபா 1,335,985 ஆன வாடகை செலவு மீளாய்வாண்டின் வாடகை செலவாக கணக்கீடு செய்யப்பட்டுள்ளது. | குறித்த வித்தியாத்தினால் வெளிப்படுத்தப்படுவது 2021 ஆண்டின் திசெம்பர் 20 திகதி முதல் 2022 சனவரி 19 திகதி வரை காலப் பகுதிக்காக செலுத்தப்பட்ட மாதாந்த வாடகை செலவாகும். | ஆண்டிற்கான செலவை சரியாக இனங்கண்டு கணக்கீடு செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (உ) | பயன்பாட்டு உரிமையுடைய மீளாய்வாண்டு இறுதியில் கொடுப்பனவு நிறைவு செய்யப்பட்ட ரூபா 50,934,183 ஆன சொத்துக்கள் (Right of use assets) மோட்டார் வண்டிக் கணக்கிற்கு மாற்றப்படாது பயன்பாட்டு உரிமையுடைய சொத்துக்களின் கீழ் உள்ளடக்கப்பட்டிருந்ததுடன் அதற்குரிய பெறுமானத் தேய்வு கணக்கிடப்பட்டு கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | இந்த கணக்கீட்டுத் தவறு 2023 நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்படும் போது சரி செய்யப்பட்டுள்ளது. | பயன்பாட்டு உரிமையுடைய சொத்துக்களை சரியாக கணகீடு செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஊ) | படல்கம பால் பதனாக்கும் நிலையத்தை ஸ்தாபிக்கும் கருத்திட்டத்திற்காக ரூபா 12,641,310,517 தொகை 2021 ஆண்டில் கமநல அமைச்சின் 118-2-3-54-2507-0/12 செலவின விடயத்தின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருந்த போதும் கம்பனியினால் திறைசேரிக்கு செலுத்த வேண்டிய கடனாக ரூபா 12,641,310,517 தொகை நிதிக்கூற்றுக்களில் இனங்காணப்பட்டு இருந்தது. அவ்வாறாயினும் இக் கடன் தொகை தொடர்பாக திறைசேரி மற்றும் கம்பனிக்கு இடையில் துணை கடன் உடன்படிக்கையொன்றும் இருக்கவில்லை. | இது தொடர்பாக மேலும் கண்டறிந்து பொறுப்பு வாய்ந்த தரப்பினரிடம் விடயங்களை வினவியதன் பின்னர் இந்த கடன் மீதியை கம்பனியின் கணக்கில் இருந்து அகற்ற எதிர்காரத்தில் நடவடிக்கை எடுக்கப்படும். | குறித்த கடன் தொகை செலுத்தப்பட வேண்டியுள்ள மீதியா என சரியாக இனங்கண்டு கணக்கீடு செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (எ) | நிதிக்கூற்றுக்களில் அரச மானியத்தின் கீழ் குறிப்பிட்டுள்ள கூட்டுத் தொகை ரூபா 16,167,750 ஆன மூலதன மானியம் 05 ஆண்டுகளிற்கு அதிக காலமாக காணப்படுவதுடன் இதற்குரிய பிற்போடப்பட்ட வருமானத்தை கணக்கிட்டு கணக்கீடு செய்ய நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | அரச மானியத்தின் கீழ் GRANT OF LCRD ஆன ரூபா 16,000,582 மீதி பிற்போடப்பட்ட வருமானமாக நிதிக்கூற்றுக்களில் கணக்கீடு செய்தல் 2023 ஆண்டு முதல் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. ரூபா 52,776 ஆன மீதி கணக்கீடு செய்யப்பட்டுள்ள போதும் இது வரை அத் தொகை கிடைக்கவில்லை. ரூபா 114,392 ஆன மீதிக்கான ஆவணங்கள் இல்லை. | அரச மானியங்களிற்கான பிற்போடப்பட்ட வருமானத்தை இனங்கண்டு நிதிக்கூற்றுக்களில் செம்மையாக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஏ) | பொலன்னருவ தொழிற்சாலைக்கு உரிய மக்கள் வங்கியின் நடைமுறை கணக்கில் 2019 முதல் 2022 ஆண்டு வரை வைப்புச் செய்யப்பட்ட கூட்டுத் தொகை ரூபா 2,611,447 ஆன இனங்காணப்படாத வைப்புக்களை இனங்கண்டு கணக்கீடு செய்ய நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | பொலன்னருவ தொழிற்சாலையின் வங்கி இணக்கக்கூற்றில் காணப்பட்ட ரூபா 2,611,447 ஆன இனங்காணப்படாத மீதிகள் 2023 மற்றும் 2024 ஆண்டுகளில் சரிசெய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது | இனங்காணப்படாத வைப்புக்களை இனங்கண்டு தீர்த்து சரியாக கணக்கீடு செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஐ) | பொலன்னருவ தொழிற்சாலையின் ரூபா 6,903,437 ஆன நானாவித வருமானங்களிற்குரிய விரிவான அட்டவணை கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை. | கருத்து தெரிவிக்கப்படவில்லை. | வருமானம் தொடர்பான தகவல்களை கணக்காய்விற்கு சமர்ப்பிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஒ) | நிதிக்கூற்றுக்களில் இருப்பிற்காக ரூபா 12,096,362 ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதுடன் இதனுள் காணப்படும் பயன்படுத்த முடியாத இருப்பை இனங்கண்டு புத்தகங்களில் இருந்து அகற்ற நடவடிக்கை எடுத்திருக்வில்லை. | பல ஆண்டுகளிற்கு முன் களஞ்சியத்தில் காணப்பட்ட பயன்படுத்த முடியாத இருப்பிற்காக (Redundant Stock) கணக்குகளில் ஏற்படுத்தப்பட்ட ஒதுக்கீடாகும். | பயன்படுத்தப்பட முடியாத இருப்புகளை இனங்கண்டு முறையாக பராதீனம் செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 1.5.3 இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டு கணக்குகள் அல்லது அறிக்கைகள்

| | விடயம் | நிதிக்கூற்று பிரகாரம் பெறுமதி | நேரொத்த அறிக்கை பிரகாரம் பெறுமதி | வித்தியாசம் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|---|---|
| | | ரூபா | ரூபா | ரூபா | | |
| (அ) | கையிருப்பு காசு | 12,900,177 | 12,319,915 | 580,262 | கூட்டிணைந்த நிதிக்கூற்றை தயாரிக்கும் போது குறித்த பெறுமதி வேறு கடன்கொடுனர் மீதியினுள் உள்ளடக்கப்படுள்ளது | கையிருப்பு காசை சரியாக கணக்கீடு செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | நடைமுறை கணக்கு காசு மீதி | 28,520,740 | 28,132,671 | 388,069 | திகனை கைத்தொழிற் சாலையின் இறுதி கணக்கினுள் காணப்பட்ட கைக்காசு கட்டுப்பாட்டுக் கணக்கு மற்றும் வங்கி மற்றும் காசு கணக்கின் மீதிகளிற்கு இடையே ஏற்பட்டிருந்த கணக்கீட்டு குறைபாடுகள் கம்பனியின் கூட்டிணைந்த நிதிக்கூற்று தயாரிக்கும் போது அந்த சரிசெய்தல் இடம்பெறாததன் மீது குறித்த வித்தியாசம் ஏற்பட்டுள்ளது. | சரியான பெறுமதிகளை இனங்கண்டு கணக்கீடு செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 1.5.4 கணக்காய்விற்கான ஆவணரீதியான சான்றுகள் இல்லாமை

| | விடயம் | தொகை | இணக்கம் செய்யப்படாத கணக்காய்வு சான்றுகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|---|
| | | ரூபா | | | |
| (அ) | வியாபார மற்றும் ஏனைய கடன்கொடுனர் (பிரதான அலுவலகம்) | 32,737,312 | மீதி உறுதிப்பாடு, அட்டவணைகள் | அனைத்து கடன்கொடுனர்களிற்காகவும் மீதி உறுதிப் பாட்டுக் கடிதங்களை கணக்காய்வு அலுவலகத்திற்கு வழங்குமாறு அறிவுருத்தி பதிவுத் தபால் ஊடாக எழுத்து மூலம் அறிவிக்கப்பட்டுள்ளது. | மீதிகளை உறுதி செய்து கொள்ள தேவையான சான்றுகளை கணக்காய்விற்கு சமர்ப்பிக்க வேண்டும். |
| (ஆ) | கடன்படுனர் மீதி | 30,134,273 | மீதி உறுதிப்பாடு, அட்டவணைகள் | மீதி உறுதிப் பாட்டுக் கடிதங்களை கணக்காய்வு அலுவலகத்திற்கு வழங்குமாறு கணக்காய்வு அலுவலகத்தின் முகவரியை உள்ளடக்கி குறித்த கடன்படுனர் தரப்பினரிற்கு பதிவுத் தபால் ஊடாக கோரிக்கை கடிதம் அனுப்பியுள்ளதுடன் மீண்டும் தொலைபேசி மூலம் அறிவுருத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | மீதிகளை உறுதி செய்து கொள்ள தேவையான சான்றுகளை கணக்காய்விற்கு சமர்ப்பிக்க வேண்டும். |
| (இ) | தேசிய பால் சபைக்கு செலுத்த வேண்டியவை | 2,108,063 | மீதி உறுதிப்பாடு, காலப் பகுப்பாய்வு | இந்த மீதிகள் பல ஆண்டுகளாக கணக்குகளில் நிலவிவரும் மீதிகளாவதுடன் அவற்றை உறுதி செய்ய எவ்வித மூல ஆவணங்களும் கம்பனியிடம் கண்டறிய முடியவில்லை. | இம் மீதிகளை இனங்கண்டு சரி செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 1.6 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

### 1.6.1 பெறவேண்டிய தொகை

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | அம்பேவெல, திகன, கொழும்பு, பொல்கஹவெல, பொலன்னருவ தொழிற்சாலைகளில் 05 ஆண்டுகளை விஞ்சிய கூட்டுத் தொகை ரூபா 95,597,421 ஆன கடன்படுனர் மீதிகளை அறவிட நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | இந்த மீதிகளில் உள்ளடங்கும் கடன்படுனர் மீதிகளில் அதிகளவான மீதிகள் தயாரிக்கப்பட்ட முறை பற்றிய விபரங்கள் காணப்படுவதுடன் ஒருசில மீதிகள் தயாரிக்கப்பட்ட முறை பற்றிய மூல ஆவணங்களை கண்டறிவதன் கடினம் காரணமாக குறித்த மீதிகள் உருவாகியுள்ள விபரங்களை தயாரிக்க முடியாதுள்ளது. | நிலுவை மீதிகளை அறவிட நடடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | கம்பனியினால் செலுத்திய முற்பணம், வைப்பு மற்றும் முற்செலுத்துகையின் கீழ் பல ஆண்டுகளாக நிலவி வரும் கூட்டுத் தொகை ரூபா 29,035,960 ஆன மீதியை தீர்க்க நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | கருத்து தெரிவிக்கப்படவில்லை | குறித்த மீதிகளை தீர்க்க நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (இ) | நிதிக்கூற்றுக்கள் பிரகாரம் திகன தொழிற்சாலை ஊழியர்களிற்கு கடனிற்று பால்மா வழங்கியது தொடர்பாக ரூபா 1,185,342 ஆன மீதியை பல ஆண்டுகளாக அறவிட நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | இது 2014 ஆண்டிற்கு முன்னரிலிருந்து நிலவி வருவதுடன் அதனை அறவிடுவது தொடர்பான தகவல்கள் கணக்கு பிரிவினுள் காணப்படவில்லை. | குறித்த தரப்பினரை இனங்கண்டு நிலுவை தொகையை அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 1.6.2 செலுத்த வேண்டிய தொகை

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| ஆண்டு 01 இற்கும் 05 இற்கும் இடையிலான கடன்கொடுனர் ரூபா 2,573,997 தொகையும் 05 ஆண்டுகளிற்கு அதிக காலமாக நிலவிவரும் ரூபா 11,192,807 ஆன கடன்கொடுனர் மீதியை தீர்க்க நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | கணக்கீட்டு தவறின் காரணமாக தொடர்ந்தும் காணப்படும் மீதிகள் தற்போது தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வந்த போதும் சில மீதிகளை உறுதி செய்வதற்கு தேவையான குறித்த மூல ஆவணங்கள் பிரதான அலுவலகத்தின் கணக்கு பிரிவில் கண்டறிய கடினமாக உள்ளது. | நிலுவை மீதிகளை தீர்ப்பதற்கு நடடிக்கை எடுக்க வேண்டும். |

### 1.6.3 முற்பணம்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| அம்பேவெல தொழிற்சாலைக்குரிய 24 வழங்குனர்கள் தொடர்பான கூட்டுத் தொகை ரூபா 1,268,431 ஆன கொள்வனவு முற்பண மீதியை (Purchase Advances) கணக்காய்வு திகதிய 2025 ஜுன் 30 திகதி வரை அறவிடப்பட்டு இருக்கவில்லை. | குறித்த முற்பண மீதிகளை தீர்பதற்காக கம்பனியினால் தற்போதே நடவடிக்கை எடுத்து வருவதுடன் அதன் பிரகாரம் ரூபா 160,000 தொகை அறவிடப்பட்டுள்ளது. | கொள்வனவு செய்வதற்காக செலுத்திய முற்பண பெறுமதியை அறவிட நடடிக்கை எடுக்க வேண்டும். |

### 1.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணக்காமைகள்

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றின் தொடர்பு | இணக்காமை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | 2021 நவம்பர் 16 இன் 1/2021 இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கை செயற்பாட்டு கைநூல் மற்றும் வழிகாட்டியின் | | | |
| i. | 2.3 பிரிவு | கம்பனியினால் 2022 ஆண்டிற்காக வரவு செலவு திட்டமொன்றை சமர்ப்பித்து இருக்காததுடன் தயாரிக்கப்பட்ட செயல் நடடிக்கை திட்டத்தில் வழிகாட்டி பிரகாரம் தகவல்கள் உள்ளடக்கப்படவில்லை என்பதுடன் இலக்கு மயப்பட்ட நிகழ்சித் திட்டங்கள் தொடர்பாக மாத்திரம் தகவல்கள் உள்ளடக்கப்பட்டிருந்தன. | கருத்து தெரிவிக்கப்படவில்லை. | சுற்றறிக்கை ஏற்பாடுகள் பிரகாரம் வரவு செலவுத் திட்டத்தை தயாரித்து சமர்ப்பிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| ii. | 6.6 பிரிவு | கணக்காண்டு முடிவடைந்து 60 நாட்களிற்குள் நிதிக்கூற்றுக்கள் மற்றும் | கருத்து தெரிவிக்கப்படவில்லை. | சுற்றறிக்கை ஏற்பாடுகள் பிரகாரம் |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | வரைபு ஆண்டறிக்கையை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்க வேண்டிய போதும் 2022 ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் 2025 பெப்ரவரி 05 திகதியே சமர்ப்பிக்கப்பட்டிருந்தன. அதன் பிரகாரம் நிதிக்கூற்றுக்களை சமர்ப்பிக்க 705 நாட்கள் தாமதித்திருந்தது. மேலும் பொது முயற்சிகளுடன் தொடர்படும் வழிகாட்டியின் இணைப்பு 3 இல் குறிப்பிடுவதன் பிரகாரம் வரைபு அறிக்கையை தயாரித்து நிதிக்கூற்றுக்களுடன் சமர்ப்பித்திருக்கவில்லை. | | நிதிக்கூற்றுக்கள் மற்றும் வருடாந்த அறிக்கையை தயாரித்து சமர்ப்பிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 4.2.1 (ஆ) பந்தி | கம்பனியினால் குறைந்த பட்சம் மூன்று வருட காலத்திற்காவது பிரதான பெறுகைகள் திட்டமொன்றை மற்றும் நிதமும் நாளாதுவரையாக்கப்பட்ட பெறுகைகள் திட்டம் ஒன்றையும் தயாரித்திருக்கவில்லை. | கருத்து தெரிவிக்கப்படவில்லை. | பெறுகைகள் வழிகாட்டிக் கோவை பிரகாரம் பெறுகைகள் திட்டத்தை தயாரிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 1.8 நிதி முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| ஐக்கிய அமெரிக்க டொலர் நிலையான வைப்பை பிணையாக வைத்து இலங்கை வங்கி நடைமுறை கணக்கிற்காக பெற்றுள்ள ரூபா 1,200,000,000 ஆன வங்கி மேலதிக பற்று வசதிக்காக 2020 ஆண்டு முதல் 2024 ஆண்டு வரையான காலத்தினுள் ரூபா 815,549,265 தொகை வங்கி மேலதிக பற்று வட்டியாக செலுத்தி இருந்ததுடன் அதற்குறிய நிலையான வைப்பு வட்டி வருமானம் ரூபா 458,910,062 ஆகும். அதன் பிரகாரம் ரூபா | 2022 ஆண்டில் அங்கீகரித்து பெற்றுள்ள வங்கி மேலதிக பற்று அதிகமாக பாவிக்கப்பட்டுள்ளதால் அதற்காக அதிகளவு வங்கி மேலதிக பற்று வட்டி வங்கியினால் அறவிட்டுள்ளதால் அதற்காக பிணை வைக்கப்பட்டுள்ள நிலையான வைப்பிற்கான வட்டி வருமானத்தை விஞ்சியுள்ளது. | வங்கி மேலதிக பற்றை குறைத்துக் கொள்ள தேவையான நடவடிக்கை எடுக்க வேண்டும். |

356,639,203 தொகை மேலதிக கிரயம் செலவிடப்பட்டு இருந்ததுடன் வங்கி மேலதிக பற்றை குறைத்துக் கொள்வது தொடர்பில் முகாமைத்துவத்தின் கவனம் செலுத்தப்பட வேண்டுமென அவதானிக்கப்பட்டது.

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவு ரூபா 473,942,776 ஆன நட்டமொன்றாவதுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் நட்டம் ரூபா 161,908,810 ஆனது. அதன் பிரகாரம் நிதி விளைவுகளில் ரூபா 312,033,966 ஆன வீழ்ச்சியொன்று அவதானிக்கப்பட்டது. இந்த வீழ்ச்சிக்கு விற்பனை கிரயம் அதிகரித்தமை, நிர்வாக செலவினம் அதிகரித்தமை முக்கிய காரணங்களாக உள்ளன.

### 2.2 முக்கிய வருமான மற்றும் செலவின விடயங்களின் போக்குப் பகுப்பாய்வு

(அ) மீளாய்வாண்டின் கம்பனியின் மொத்த விற்பனை வருமானம் முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக 5.49 சதவீத வளர்ச்சியை காண்பித்த போதும் விற்பனை கிரயம் அதற்கு ஒப்பாக 12.73 சதவீதத்தால் வளர்ச்சி அடைந்திருந்தது. முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக விற்பனைக் கிரயத்தில் உள்ளடங்கியுள்ள ஆரம்ப கிரயம் ரூபா 1,299,796,119 இனால் அதாவது 12.58 சதவீதத்தாலும், வலுசக்தி கிரயம் ரூபா 577,855,524 இனால் அதாவது 102.62 சதவீதத்தினாலும், எல்லைக் கிரயம் ரூபா 2,026,093,823 இனால் அதாவது 17.79 இனாலும் அதிகரித்தமை விற்பனைக் கிரயத்தின் வளர்ச்சிக்கு தாக்கம் செலுத்தியிருந்தன. கடந்த ஆண்டின் மொத்த இலாப விகிதம் 9.5 சதவீதமான போதும் மீளாய்வாண்டில் அது 3.29 சதவீதமானது. அதன் பிரகாரம் மொத்த இலாபம் 63.5 சதவீதத்தால் குறைவடைந்திருந்தது.

(ஆ) அண்ணிய செலாவனி இலாபம் காரணமாக கம்பனியின் ஏனைய வருமானம் கடந்த ஆண்டிற்கு ஒப்பாக 725 சதவீதத்தால் வளச்சியடைந்து இருந்தது. நிதி வருமானம் 188 சதவீதத்தால் அதிகரித்திருந்தது. அதற்கு ஒப்பாக நிதி செலவு 71 சதவீதத்தால் குறைவடைந்திருந்தது. முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக நிர்வாக செலவினம் மற்றும் விநியோக செலவினம் முறையே 25 சதவீதத்தால் மற்றும் 19 சதவீதத்தால் வளர்ச்சி அடைந்திருந்தது.

### 2.3 விகிதப் பகுப்பாய்வு

(அ) மீளாய்வாண்டில் நடைமுறை சொத்து விகிதம், விரைவு சொத்து விகிதம், மொத்த இலாப விகிதம், தேறிய இலாப விகிதம் முறையே 1.18 உம், 0.39 உம், 3.29 சதவீதம், மற்றும் மறை 3.60 உம் ஆனதுடன் முன்னைய ஆண்டின் அந்த விகிதங்கள் முறையே 1.99 உம், 0.76 உம் 9.50 சதவீதம் மற்றும் மறை 1.30 உம் ஆனது. அதன் பிரகாரம் இந்த விகிதங்களில் வீழ்ச்சியொன்று அவதானிக்கப்பட்டது. நடைமுறை சொத்து விகிதம் மற்றும் விரைவு சொத்து விகிதங்களில் குறைவொன்று காணப்படுவதுடன் இதன் காரணமாக கம்பனி செயற்படு மூலதன பிரச்சினைக்கு முகம் கொடுத்துள்ளதாக அவதானிக்கப்பட்டது. விரைவு சொத்து விகிதம் 0.39 சதவீதமானதுடன் கம்பனியின் நடைமுறை பொறுப்பை தீர்ப்பதற்கு போதிய திரவச் சொத்து இல்லையென அவதானிக்கப்பட்டது.

(ஆ) கம்பனியின் மீளாய்வாண்டு மொத்த இலாப விகிதம் 3.29 சதவீதமும் மற்றும் தேசிய இலாப விகிதம் மறை 3.60 சதவீத பெறுமானத்தை பெற்றுள்ளமை கம்பனியின் நிலைத்திருக்கும் தன்மையின் மீது பாதகமாக தாக்கம் செலுத்துவதாக அவதானிக்கப்பட்டது. மேலும் பங்கொன்றின் ஈட்டல் மீளாய்வாண்டில் மறை 0.56 ஆனதுடன் முன்னைய ஆண்டில் அது மறை 5.07 ஆக இருந்தது. அதன் பிரகாரம் மீளாய்வாண்டில் பங்கு மூலதனத்திற்கு ஈட்டுதல் செய்யப்படாததுடன் நிறுவனத்தின் செயற்பாடு வினைத்திறனின்மை மற்றும் செயலாற்றுகை பலவீன மட்டத்தில் காணப்பட்டது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ வினைத்திறமை இன்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | சந்தைக்கு விநியோகிக்கும் நோக்கில் அன்றி ஊழியர் நலன்புரி அடிப்படையில் மாத்திரம் உற்பத்தி செய்யப்படும் 750 கிராம் Butter Bulk Staff Pack இன் விற்பனை விலை ரூபா 330 ஆனதுடன் 1 கிலோ கிராம் பட்டரின் தொழிற்சாலை விலை மீளாய்வாண்டில் ரூபா 1,700 இற்கும் ரூபா 2,753 இற்கும் இடையிலான வீச்சளவில் காணப்பட்டது. மீளாய்வாண்டில் 750 கிராம் 14250 பட்டர் பக்கட்களை நிறுவன ஊழியர்களிற்கிடையே விற்பனை செய்ததன் மூலம் ரூபா 4,702,500 வருமானம் ஈட்டியிருந்த போதும் இந்த 1 கிலோ கிராம் பட்டரின் தொழிற்சாலை விலைக்கு ஒப்பாக விற்பனை செய்யாததன் காரணமாக ஆண்டினுள் ஏற்பட்ட விற்பனை வருமான இழப்பு ரூபா 19,485,795 ஆகும். | இது கம்பனியினால் முகாமைத்துவத்தின் அங்கீகாரத்துடன் நீண்ட காலமாக மாதாந்தம் நலன்புரி அடிப்படையில் கம்பனியின் நிரந்தர ஊழியர்களிற்காக பட்டர் 750g கொண்ட ஒரு உருப்படி வீதம் வழங்கப்படுவதுடன் குறித்த உருப்படியின் உற்பத்தி கிரயத்திற்கு ஒப்பாக ஒரு 750g பட்டர் துண்டை ஊழியரிற்கு விற்பனை செய்வதன் மூலம் ஏற்படும் நட்டம் 2022-12-31 திகதியன்று அண்ணளவாக ரூபா 614 தொகை அளவாகும். அதன் பிரகார கணக்கீட்டின் படி குறிப்பிட்டுள்ள வருமான இழப்பு கம்பனிக்கு ஏற்படவில்லை. | கம்பனி தொடர்ந்தும் நட்டமடையும் நிலைமையினுள் ஊழியர் நலன்புரி செலவினத்தை குறைத்தல் மற்றும் உற்பத்தி விற்பனையை அதிகரித்து வருமானத்தை வளர்த்துக் கொள்ள தேவையான நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | நடைமுறை வேளைகளில் உள்ளடங்கும் கெட்டபே விற்பனை நிலைய நிர்மாணம், திகன பால் தொழிற்சாலையின் ஐஸ்கிரீம் கப் மற்றும் கோன் நிரப்பும் இயந்திரத்தை ஸ்தாபித்தல் மற்றும் பொலன்னறுவை, அம்பேவெல மற்றும் திகனை தொழிற்சாலை நவீனமயமாக்கல் நடைமுறை வேலைகளிற்கு உரியதாக முறையே ரூபா 150,000 உம், ரூபா 15,445,587 உம் மற்றும் ரூபா 790,264,562 உம் ஆன மீதிகள் 2012 ஆண்டு முதல் தொடர்ந்து முன் | பல ஆண்டுகளிற்கு முன்னர் ரூபா 150,000 தொகை கண்டி கெட்டம்பே பிரதேசத்தில் விற்பனை நிலையமொன்றை நிர்மாணிப்பதற்காக செலுத்தியுள்ளதுடன் அது இதுவரை நிர்மாணித்து நிறைவு செய்யப்படவில்லை. ரூபா 15,445,887 பெறுமதியான ஐஸ்கிரீம் கப் மற்றும் கோன் நிரப்பும் இயந்திரமொன்று இற்றைக்கு பல ஆண்டுகளிற்கு முன்னர் | நீண்ட காலமாக நிலவிவரும் நடைமுறை வேலை மீதிகளிற்குரிய வேலைகளை விரைவில் நிறைவு செய்து குறித்த மீதிகளை மூலதனமாக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | கொண்டு வரப்படுவதுடன் அந்த நிர்மாணங்கள் மற்றும் நவீனமயமாக்கல் நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. | திகன கைத்தொழிற் சாலைக்கு கொள்வனவு செய்துள்ள போது அதை இதுவரை பயன்படுத்தும் நிலைக்கு உருவாக்கப்படவில்லை.<br><br>தொழிற்சாலை நவீனமயமாக்கும் நிகழ்சித் திட்டத்தின் கீழ் திகன தொழிற்சாலைக்காக ரூபா 790,264,562 ஆன தொகையை ஈடுபடுத்தியிருந்த போதும் இதுவரை அந்த நவீனமயமாக்கும் நடவடிக்கை நிறைவு செய்யப்படவில்லை. | |
| (இ) | பிரதான அலுவலகத்தின் நிதிக்கூற்றுக்களில் உள்ளடங்கும் விரக்காக ஒதுக்கப்பட்ட மீதியனுள் பல ஆண்டுகளாக நிலவி வரும் ரூபா 8,425,296 ஆன வருமான வரி தண்டப்பண ஒதுக்க மீதி மீளாய்வாண்டு இறுதி வரை தீர்க்கப்படவில்லை. | பிரதான அலுவலகத்தின் கணக்கினுள் வரிக்கான ஒதுக்கத்தின் கீழ் காண்பித்துள்ள செலுத்த வேண்டிய வருமான வரிக்கான தண்டப்பணம் 2003 ஆண்டளவில் கணக்கீடு செய்யப்பட்டுள்ளதால் குறித்த மீதியை உறுதி செய்வதற்கான தகவல்கள் கணக்குப் பிரிவில் இல்லை. | இம் மீதியை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஈ) | அம்பேவல தொழிற்சாலை அமைந்துள்ள அரசிற்கு சொந்தமான காணி 40 ஏக்கர் 01 ரூட் 36 பர்சஸ் ஆவதுடன் அங்கு கம்பனியினால் ரூபா 5,548 மில்லியன் பெறுமதியான நிர்மாணங்கள் மற்றும் பொருத்துக்கள் செய்துள்ள போதும் இந்த காணியின் உரிமையை 2022 திசெம்பர் 31 வரையும் கம்பனிக்கு சுவீகரித்திருக்கவில்லை. | அரசினால் அம்பேவெல தொழிற்சாலை அமைந்துள்ள காணி உள்ளடங்களாக இன்னும் 37 அளவு காணிகளை மில்கோ நிறுவனத்திற்கு 50 ஆண்டு குத்தகை அடிப்படையில் வழங்க கொள்கை ரீதியான தீர்மானமொன்றை எடுத்துள்ள போதும் இதுவரையும் அக் காணிகளிற்காக குத்தகை உறுதி வழங்க அரசினால் நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | காணியின் உரிமையை கம்பனிக்கு சவீகரிக்க தேவையான நடவடிக்கை எடுக்க வேண்டும். |